**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | STC 5/2020 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | லோகநாதன் |
| Father Name | : | அவிநாசியப்ப கவுண்டர் |
| Age | : | 60 |

**Accused absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.03.2026.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகார்தாரர் கருப்பசாமியின் தந்தை பெயர் ஞாபகம் இல்லை. அவரது மனைவி பெயர் எனக்கு தெரியாது. அவருக்கு எத்தனை குழந்தைகள் என்ற விபரமும் எனக்கு தெரியாது. கருப்புசாமி உடன் பிறந்தவர் எத்தனை பேர் என்ற விபரமும் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க கருப்புசாமி எனக்கு எந்த ஆவணம் தரவில்லை என்றால் சரிதான். கருப்பசாமி எந்த வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது, ஆனால் செங்கப்பள்ளி மற்றும் பலகவுண்டன்பாளையத்தில் கணக்கு உள்ளது. அவரது வீடு எந்த வகை வீடு என்றால் தெரியாது.

2. வழக்கறிஞர் அறிவிப்பு எந்த வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பு 2016 அனுப்பப்பட்டது ஆனால் தேதி தெரியவில்லை. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. எந்த காரணத்திற்காக

இந்த வழக்கு காசோலை திருப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

3. அவ்வாறு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ரூபாய் ஆறு லட்சம் எந்த நோட்டுகளாக கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது, ரூபாய் 500 தாள் அதிகமாக இருந்தது. கொடுத்ததாக சொல்லப்படும் 6 லட்சத்திற்கு எவ்வளவு வட்டி என்று தெரியுமா என்றால் தெரியாது. பணம் கொடுத்த தேதி எனக்குத் தெரியாது. அந்த இடத்தில் புகார்தாரர் மற்றும் எதிரியுடன் நான் மட்டும்தான் இருந்தேன், வேறு யாரும் இல்லை. கருப்புசாமி பவர்லூம் வைத்துள்ளார்.

4. நான் கருப்புசாமியிடம் எதற்காக ரூபாய் 6 லட்சம் கொடுத்தீர்கள் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அவரும் அதை பற்றி எந்த ஒரு விளக்கமும் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். பணம் அவர் வாங்கினாரா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றாலும், அவர்கள் தனியாக பேசிக்கொண்டு இருந்தார்கள் என்றாலும் சரிதான். அவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டபோது ஏதேனும் ஆவணங்களை கொடுத்தார்களா என்று விவரம் தெரியுமா என்றால் தெரியாது. கருப்பசாமி வருமான வரி செலுத்தி வருகிறாரா என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு வேறு வழிகளில் எவ்வளவு வருமானம் வருகிறது என்று தெரியுமா என்றால் தெரியாது.

5. கருப்பசாமி கலாமணிக்கு ரூபாய் ஆறு லட்சம் கொடுத்ததாக எனக்கு சொன்ன பின்பு தான் எனக்கு அதைப் பற்றி தெளிவாக தெரியும் என்றால் சரிதான்.

**(எதிரித்தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.13 15:52:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.